வழியாகச் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக, புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாட்களாக எழுந்து, தேர்தல் அறிக்கையிலும் இது வாக்குறுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புறவழிச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அந்த நகர்ப் பகுதிகளை கணக்கெடுத்து புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்று எங்கள் துறைக்கு முதல் உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த வகையில்தான், இந்த ஆட்சி பொறுப்பேற்ற உடனே, பல்வேறு நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு, 4 நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டில் 4 நகரங்களுக்குப் புறவழிச் சாலை அமைக்கின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் கோரிய மணப்பாறை புறவழிச் சாலை கட்டாயம் அமைக்கப்பட வேண்டிய சாலையாக இருக்கிறது. வருங்காலங்களில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அது கட்டாயம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

சட்டக் கல்லூரி

***10080—திரு. ஆர். வைத்திலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2024 ஜூன் 29]

(அ) ஒரத்தநாடு தொகுதியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி இல்லை. தனியார் சட்டக் கல்லூரி இருக்கிறது. ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மையப் பகுதியாக இருக்கின்றது. கால்நடைத் துறைக்குச் சொந்தமாக ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அந்த இடத்திலே சட்டக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டிலே அரசு சார்பிலே 15 சட்டக் கல்லூரிகளும், அம்பேத்கர் சீர்மிகு சட்டப் பள்ளியும், திருச்சியிலே தேசிய சட்டப் பல்கலைக்கழகமும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரத்தநாட்டிற்கு அருகில்தான் திருச்சிராப்பள்ளி இருக்கிறது; காரைக்குடி இருக்கிறது; ஸ்ரீரங்கம் இருக்கிறது; அங்கு போதிய இடங்கள் இருக்கின்றன. எனவே, ஒரத்தநாட்டில் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு தொடரா செலவினமாக ரூ.100 கோடியும், தொடர் செலவினமாக ரூ.2½ கோடியும் ஏற்படும். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தற்போது ஒரத்தநாட்டில் புதியதாக சட்டக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். சுதந்திரப் போராட்ட வீரத் தியாகி இமானுவேல் சேகரனுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மணிமண்டபம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, அவர் பிறந்த ஊரில் அக்டோபர் திங்கள் 9 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்த சமூக நீதிக் காவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) எனது சார்பாகவும், உலகம் முழுவதும் வாழ்கின்ற தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொடர்ச்சியாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி என்ன? சட்டக் கல்லூரி வேண்டுமா, வேண்டாமா?*

முற்பகல் 9–55

திரு. எம்.சி. சண்முகையா: *ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் மன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கு போதுமான அரசு நிலம் உள்ளதால், புதிய நீதிமன்றக் கட்டடம் அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அங்கே இப்போது இடங்கள் கொடுத்தாலும்கூட, அங்கே புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால்,* combined court building *என்று சொல்லி, 13 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே*

2024 ஜூன் 29]

புதிதாகக் கட்டடங்களும், அங்கே இருக்கக்கூடிய நீதித் துறை நடுவர்களுடைய குடியிருப்புகளும் கட்டப்படுகின்றன. எனவே, நிதிநிலைமைக்கேற்றவாறு, ஒன்றிய அரசாங்கத்தினுடைய matching grant அடிப்படையிலேதான், ஆண்டுதோறும் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அந்தவகையில் முன்னுரிமையிலே இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு முதல்வரிசையில் இடம் கொடுத்து, அதைத் தொடர்ந்து, எங்கெங்கெல்லாம் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கொடுக்கப்படும். ஒட்டப்பிடாரம் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற அந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கடிதம் கொடுத்திருக்கிறார். அதுகுறித்து உயர் நீதிமன்றத்தின் மூலமாக அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்பட்சத்தில், நிதித் துறையினுடைய ஒப்புதல் பெற்று, அதன் பிறகு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய அறிவிப்பு தேவைப்படின் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

இசைப் பள்ளி

***92808—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் இசைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தற்போது வாய்ப்பில்லை.